REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 305

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 23உ சனி (5-6-54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 24உ ஞாயிறு (6-6-54)

பெப்சுவில் கொரில்லாப் படையினர்!

'சிகப்புக் கட்சி'யின் சேட்டை அம்பலம்!

கொள்ளைக்கும் கொலைக்கும் ஒரு கட்சி!

28 கொள்ளைகளும், 26 கொலைகளும் நடந்துள்ளனவாம்?

பெப்சு மாநிலத்தில், கொள்ளையடித்தலையும் கொலை புரிதலையுமே மூலமாகக்கொண்டு ஒரு கொரில்லாப் படையினர் பணி புரிந்து வந்துள்ளனர்.

அவர்களில் எஞ்சினவர்களையும் கண்டுபிடித்துவிட்டதாக போலீஸ் அறிவிக்கிறது.

சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில், பெப்சுவில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படும் வரையில், 'சிகப்புக் கட்சி' என்ற பெயரில் அக்கொரில்லாப் படையினர் இல்லெனன்காரா, மான்ஸ் என்ற பகுதியில் வேட்டையாடிக் கொண்டு வந்தனர்.

தலைவர் ஆட்சிக்குப் பின்னர், கடந்த பன்னிரண்டு திங்களாக தலைமறைவாகத் திரிய ஆரம்பித்தனர்.

மாநிலத்தின் எங்கோ ஒரு இடத்தில் ஏராளமான துப்பாக்கி, வெடி குண்டு போன்ற கொடும் ஆயுதங்களை கொரில்லாப் படையினர் மறைத்து வைத்திருப்பது தங்களுக்குத் தெரியுமென போலீஸ் அறிவித்திருக்கிறது.

அவ்வாயுதங்களைக்கொண்டு பெரும் பெரும் கொள்ளைகளையும், கொலைகளையும் செய்ய திட்டமிட்டிருந்தனராம் கொரில்லாப் படையினர்!

தங்கள் கூற்றுக்குச் சாதகமாக, குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு முன்னதாக, பெப்சுவில் நடைபெற்றுள்ள 28 கொள்ளைகளையும், 26 கொலைகளையும் ஆதாரமாகப் போலீஸ் காட்டுகிறது.

'சிகப்புக் கட்சி'யின் முக்கியஸ்தர் எனக் கருதப்படும் புரான் சிங் என்ற ஒருவரை சில நாளைக்கு முன் போலீஸ் கைது செய்தது. அவன் ஜாமீனில் வெளிவந்ததும், தலைமறைந்து விட்டான்.

மறுபடியும், பிரத்தியேகப் போலீஸ் படை அவனைக் கைது செய்தது.

அவனைக் கைது செய்த போது, அவனிடமிருந்து இராணுவத்தில் உபயோகப்படுத்தப்படும் பெரிய துப்பாக்கி ஒன்றும், இரண்டு கைத் துப்பாக்கிகளும், சில வெடி குண்டுகளும் போலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கியில் ஒன்று இராணுவக் காரியாலயத்திலிருந்து களவாடப்பட்டதாம்!

சட்டசபை - போர்க்களமாயிற்று

ராஜஸ்தானில் சரிதம் காணா நிகழ்ச்சி

சென்ற மே 21-ந் தேதியன்று ராஜஸ்தான் சட்டசபையில் சபாநாயகரை எதிர்த்து அவர்மீது நம்பிக்கை இல்லை என்று எதிர்க் கட்சியினர் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தனர். இத்தீர்மானத்தைப் பிரரேபிக்காமல் செய்ய எவ்வளவோ பேர் முயன்றனர்.

கூட்டத்திற்கு உதவி சபாநாயகர் லாம்சிங் தலைமை தாங்கினார். இத்தீர்மானத்தை அனுமதிப்பதில் போதிய எண்ணிக்கையுள்ள மெம்பர்கள் கையெழுத்திடுவது பற்றி பிரச்சினை எழுந்தது. எவ்வளவு பேர் ஆதரித்தால் தீர்மானம் அனுமதிக்கப்படும் என்பதைத் தீர்மானிக்க முதல் அமைச்சர் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தவிர்க்கவே முதல் அமைச்சர் இவ்வாறு செய்கிறார் என்று எதிர்க் கட்சியினர் வெளியேறினார்கள். பின்னர் இரண்டு நிமிடம் சென்ற பிறகு திரும்பி உள்ளே வந்தனர். உதவி சபாநாயகர் ஏதோ சொல்லவும் சபையில் ஒரே குழப்பம் ஏற்பட்டது. மேஜை மீதேறியும், நாற்காலிகளை உடைத்தும் 'வெட்கம் வெட்கம்' என்று கோஷம் எழுப்பியும் உறுப்பினர்கள் கலகம் செய்தனர்.

பின்னர் தோழர் லாம்சிங் போலீசார் உதவியால் எர் கே. பிபாம் என்பவரை சட்டசபையைவிட்டு வெளியேற்றி பின்னர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

பாரிஸ் பேச்சு வார்த்தை முறிவு!

பிரெஞ்சிந்தியத் திட்டங்களின் எதிர்காலம் பற்றி பாரிசில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்து போயின என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இந்தியா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகள் சார்பிலும் பல யோசனைகள் கூறப்பட்ட போதிலும், நல்ல முடிவேதும் ஏற்படவில்லை!

பிரெஞ்சு இளைஞர்களிடை பொதுவுடைமையர் பிடி தளருகிறது!

கம்யூனிஸ்டு தலைவரே கூறுகிறார்!

"இளைஞர்களை தனது அணைப்புக்குள் கொண்டுவரும் கவர்ச்சியைக் கம்யூனிஸ்டு கட்சி இழந்துவிட்டது,"

—என பிரெஞ்சு கம்யூனிஸ்ட் தலைவர் ஜாகுண்டக்லஸ் என்பவர், நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் முறையிட்டார்.

963 பிரதிநிதிகள் கூடியிருந்த கட்சி மாநாட்டில், இளைஞர்களைக் கட்சிக்குள்கொண்டுவரும் முயற்சியில் கம்யூனிஸ்டு கட்சி செய்துள்ள தவறையும், கம்யூனிஸ்டு இளைஞர் இயக்கத்தின் குறைவையும் எடுத்துக் காட்டினார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக, ஐரோப்பிய இராணுவ அமைப்பு ஏற்பாட்டிற்கு எதிர்ப்பு செய்வது தான் கட்சியின் முக்கிய திட்டமாக இருந்து வருகிறது.

கதருக்கு 1-கோடி; கைத்தறிக்கு 5-கோடி!

ஒன்று விழலுக்கிறைத்த நீர்! மற்றொன்று யானை பசிக்கிடும் பொரி!

இந்திய சர்க்கார் 1954—55ம் ஆண்டில், கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக ரூ 5 கோடி ஒதுக்கியுள்ளனர்.

சென்ற ஆண்டு, (1953—54ம்) ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்டதுசமார் ரூ 3 கோடிதான்!

மேலும், கதர், இதர கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக் கெனவும் 5.31-கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பி.-சோ. அமைச்சர் குழுவை சுட்டுச் சாம்பலாக்க!

காங்கிரஸ் கட்சி கட்டி வரும் 'அரக்கு மாளிகை!'

அகர்வால் அனுமதியுடனே ஆரம்பம்!

திருவனந்தபுரம், ஜூன் 4—

ஆட்சியில் இருக்கும் பிரஜா சோஷலிஸ்டு சர்க்காருக்கு திட்டம் ஒன்றைத் தருவதென்றும், அத்திட்டத்தை நிறைவேற்ற பிரஜா—சோஷலிஸ்டுகள் தவறினால் சர்க்காருக்கு தாங்கள் அளிக்கும் ஆதரவை வாபஸ் பெறுவது என்று திரு—கொச்சி காங்கிரஸ் முடிவு செய்துள்ளது என்று தெரிகிறது.

இன்று நடைபெற்ற திரு—கொச்சி காங்கிரஸ் சட்டசபைக் கட்சி நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இக் கூட்டத்தில் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி அகர்வால், பிரதேச காங்கிரஸ் தலைவர்களான பனம்பள்ளி கோவிந்த மேனன், கே. சங்குப்பிள்ளை, கே. எம். கோரா, எ. ஆர். இலன்காத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டம் மிகவும் இரகசியமாக நடைபெற்றது. கூட்டத்தில் பிரஜா-சோஷலிஸ்டு மந்திரி சபையில் இலவசக் கல்வித் திட்டம் கண்டிக்கப் பட்டதுடன் கல்வி முறையில் மாற்றம் தேவை என்று வற்புறுத்தப் பட்டதாம்.

திரு-கொச்சி சட்டசபை ஜூன் 12-ம் தேதி கூட இருக்கிறது. இந்தக் கூட்டம் நடைபெறுமுன்பாக தங்கள் திட்டத்தை ஒப்புக் கொள்ளுமாறும், இல்லையேல் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு மந்திரி சபைக்குக் கிடைக்காது என்றும் காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்துவார்கள் என்று தெரிகிறது.

---

11 எம்.எல்.ஏ.க்கள் சிறையில்!

532 பேர் கைது!

டாக்கா, ஜூன் 4—

கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டது முதல் இது வரை 532 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது

கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் எம். எல். ஏக்களாவர்.

அவர்களில் பாகிஸ்தான் தேசிய காங்கிரஸ் எம். எல். ஏ வான கிஷோர் சேன்குப்தாவும் ஒருவர்.

தோழர் எம். ஆர். இராதா வழக்கு

உயர்நீதி மன்ற உத்தரவு

நாடக நிகழ்ச்சி சட்டம் (1857) செல்லத்தக்கது அல்ல வென்று தோழர் எம். ஆர். இராதாவின் சார்பில் சமர்ப்பித்த மூன்று மனுக்களை விசாரிக்க நீதிபதி டி. கே. இராமசாமி கவுண்டர் அனுமதி அளித்தார்.

அரசியல் சட்டத்தில் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்திற்கு இச்சட்டம் முரணானதென்று மனுக்களில் கூறப்பட்டிருக்கிறது.

சர்க்கார் தடை செய்த நாடகங்களில் கலந்துகொண்டதாக சேலம் ஜில்லா கோர்ட்டில் தோழர் எம் ஆர். இராதா மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் விசாரணையை நிறுத்தி வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

தோழர் எம். ஆர். இராதா அவர்களுக்காக வழக்கறிஞர் எம் கே. நம்பியார் ஆஜரானார்.

மாகாளி பெயர் கூறி பணமோசடி!

'தெய்வ' பலத்தால் பிணி போக்குவோர் சிறையில்!

பம்பாய், ஜூன் 4—

அப்துல் ரஹ்முகமது ஜலால் என்ற ஒருவர், 'தெய்வ பலத்தால்' எல்லா நோய்களையும் குணப்படுத்துவதாக செய்தித் தாள்களில் ஆடம்பரமாக விளம்பரப்படுத்தி, ஏமாந்தவர்களிடம் பணம் பறித்துக் கொண்டிருந்தார்.

தனது பெயரையும் வெட்டி, 'புரொபசர் ஜலால்' என்று சுருக்கி வைத்துக் கொண்டார்.

விளம்பரத்தைக் கண்டு ஏமாந்த ஒரு கிழவி, தனக்கிருந்த நீண்டகால மண்டைக் குத்தலைப் போக்குமாறு, ஜலாலை அணுகினாள். அவளிடமிருந்து 420-ரூபாயை 'தெய்வ' பலத்தார் பறித்துக் கொண்டார்!

பிணி தீர்வது பெறாத அக் கிழவி, மீண்டும் அவரை அண்டினாள்; அது சமயம், அவளைக் குணப்படுத்த மகாகாளி ரூ. 2000 கேட்கிறாள் எனக் கூறினார், அப்போலி!

அவளும், மற்றொரு மித்திரனிடத்தினின்று சேர்த்துக்கொண்டு, கிழவியிடமிருந்து இருமுறையாக ரூபாய் 2,000 பறித்துக் கொண்டனர் புதிய குரும், தனித்த முறையில் 581 ரூபாயை கிழவியிடமிருந்து கொள்ளை கொண்டான்.

பணத்தை இழந்த கிழவி, மண்டை இடி நீங்கப்பெறாத காரணத்தால் முடிவில் போலீசில் புகார் செய்தாள்.

புரொபசர் ஜலால், மேற்கண்டபடி ஏமாற்றியதற்கும் மின்னும் தண்டனை பெற்றார்!

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 5—6—54 சனி

மீண்டும் உளறல்!

அன்பர் ஆச்சாரியாரை அரசியல் அயங்கவியாக்கினது, அவர் எதேச்சாதிகாரமாகக் கொண்டு வந்து புகுத்திய கல்வித் திட்டம்! அத்திட்டத்தை, அவர் பேனா முனையில் நடைமுறைக்குக் கொண்டுவந்தகாலை, திட்டத்தின் அருமை பெருமைகளைக் குறித்து, அவர் கூறிய பொய் கந்தத்திலும் கிடையாது!

குலத் தொழிலைக் கட்டிக் காக்கும் குணங் கொண்டது, அத்திட்டம் என்றார். சனாதனப் பாதுகாவலனின் சாகசம் தெரிந்த நாம், குலத் தொழிலுக்குக் கல்வி உருவில் தரப்படும் புதிய குத்தகைக் கொடுமையை எடுத்துக் கூறி, எதிர்ப்பு முன்னணியை உருவாக்கினோம். எதிர்ப்பின் வேகத்தைக் கண்ட ஆச்சாரியார், 'குலதர்மம்' என்று சொல்வதை நிறுத்திக் கொண்டு, சிறுவர்களுக்குத் தொழில் ஆர்வத்தை மூட்ட வல்லது, தொழிலின் சிறப்பை உணர்த்தக்கூடியது தனது திட்டம் என மாற்றுமுறைக்கத் தொடங்கினார்.

ஆச்சாரியாரின் இம்மாரீச சத்தனத்தைக்கண்டு மயங்காமல், மேலும் எதிர்ப்பணியை விரிவாக்குவதில் நாம் கண்ணும் கருத்துமாக இருந்தோம். எதிர்ப்பு, எதிர்பாராத இடங்களில் எல்லாம் இருந்து, சீறிப் படமெடுத்து ஆடியது!

திட்டத்திற்கும், தமது பதவிக்கும் எதிர்காலம் எப்படி ஆகுமோ என ஏக்கம் கொண்ட அந்தப் பெரியவர், குறைந்த பணச் செலவில் அனைத்துக் குழந்தைகளுக்கும் குறுகிய காலத்திற்குள் கல்வி தருவதற்கே, புதிய கல்வித் திட்டம் என பசப்பு மொழி பேசிடக் கிளம்பினார். ஆரம்பத்திலே இருந்த ஆணவம் குறைந்து, இறுதிக் கட்டத்தில் அவர் பேச்சில் குழைவு தோன்றத் தொடங்கியது.

ஐயோ! முதியவர் கண்ணீர் வடிக்கிறாரே, எல்லாச் சிறுவர்களுக்கும் கல்விக் கண் திறப்பது எனக் கனி உரை பகர்கின்றாரே. அவர் வயதினை மதிப்போம், துவக்கத்தில் கூறிய துடுக்கான சொற்களை மறப்போம், திட்டத்தை ஏற்போம் என்ற அறிவுச் சரிவு நமக்கு ஏற்படவில்லை. அவருடைய சென்ற காலப் போக்கு, சோதனை குணம், அந்த எண்ணத்தை நமக்குக் கொடுக்கத் தவறிவிட்டது.

அறப்போர்க் களத்தில் நமது கழகத் தோழர்கள் அந்த நாசகாலர் ஏவிய குண்டாந்தடிக்குப் பலியாயினர்; குருதியை மண்ணிலே குழைத்தனர்; கை கால்களைக் காணிக்கை கொடுத்தனர்; ஆருயிரைத் தந்தனர். இவ்வளவு இன்னல்களையும் தாங்கிக்கொண்ட இடமிருந்த நமது தோழர்களின் இதயத்தில், ஆச்சாரியார் நிலை கண்டு இரங்கும் இரக்கம் மட்டும் எங்கோ இடம் பெயர்ந்து போய் விட்டது!

திட்டத்தை எதிர்த்து நாம் தொடுத்த அறப்போர், காங்கிரஸ் கூடாரத்துக்குள்ளாகவே ஆச்சாரியாருக்கு எதிராகக் கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. ஆச்சாரியார் துடித்தார்! கண்கலங்கி நின்றார்! தம்மைக் கூடாது எனக் கொக்கரித்தவர்களின் பாதாரவிந்தங்களில் மண்டியிட்டார்! மானத்தைக் காப்பாற்றுங்கள் என மாரடித்துக் கொண்டு அழுதார்! பதவி பிச்சை கேட்டார்! 'நானாகப் போய் விடுகிறேன் — என்னை விரட்டாதீர்—வெளியேற்றாதீர்' எனக் குடல் நடுங்கக் கதறினார்!

வெளிப்படையாகவே உத்திரமேரூர் மாநாட்டில், தமக்கு மலர் மாலை அணிவித்தகாலை, 'என் கழுத்தில் இடும் மலர் மாலையா இது? என் கழுத்திற்கு மாட்டும் தூக்குக் கயிறு அல்லவோ இது!'' என எரிச்சலும் ஏமாற்றமும் கலந்து கத்தினார், சனாதனச் செம்மல்!

"முன்னால் செல்லவிட்டு என்னைப் பின்னிருந்து காலை இடறுகிறீர்களே?" எனவும், 'முதுகில் கூரிய கத்தி கொண்டு குத்துகிறீர்களே?' எனவும் சட்டசபை கூட்டத்திலேயே ஒப்பாரி வைத்தழுதார் அன்பர் ஆச்சாரியார்!

அவருடைய திட்டம், அவர் வீற்றிருந்த முதல் மந்திரி பதவியிலிருந்து, அவரை உருட்டித் தள்ளிவிட்டுச் செத்தது!

மஞ்சளும், குங்குமத் திலகமும், மண மலரும் இழந்து, ஊர் காண வேர்ந்தால எச்சைத் தாங்கும் மொட்டை மூதாட்டியைப்போல், அரசியலில் ஆச்சாரியாரை முக்காடிட்டு மூலையில் உட்கார வைத்துவிட்டது, புதிய தொடக்கக் கல்வித் திட்டம்!

திட்டம், திராவிடச் சேய்களின் கண்களைக் குருடாக்கும் என நாம், நமது எதிர்ப்புக்கான காரணமாகக் கூறினோம். அதை மறுக்கப் புகுந்த ஆச்சாரியாரே, காந்திய ஆதாரக் கல்விக்கும் தமது திட்டத்திற்கும் துளியும் மாறுபாடு கிடையாது எனக் கூச்சலிட்டார் அன்று. ஆதாரத் திட்டக் கல்வியை ஆதியோடந்தமாக அறிந்துள்ள குமாரப்பா, அக்கருத்துக்குச் சவுக்கடி தந்தார். ஆதாரக் கல்வித் திட்டம் வெண்ணெய் — ஆச்சாரியார் திட்டம் சுண்ணாம்பு எனக் குமரப்பா சாடினார்!

ஆனால், இன்றோ, ஆச்சாரியார் சொல்லுகிறார்—தமது திட்டம், ஆதாரக் கல்விக்காக அமைந்த வாயிற்படி என்று!

அன்று இரண்டும் ஒன்று என்றார்! இன்று வாயிற்படி என்கிறார்!

இவ்வளவு நாள் பிடித்தது, உண்மையின் உருவத்தை, ஆச்சாரியார் தம் திருவாயால் ஒத்துக்கொள்ள! ஐயோ! பாவம்! வியாசர் விருந்தளித்த வீரப் பல்லவர் வாயில், உண்மை நுழைவதென்பது சுலபமான காரியமா?

சென்ற இருபது தினங்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற ஒரு காலட்சேபத்தில் அன்னார் ஆச்சாரியாரும் கலந்துகொண்டனர். அப்பொழுது, அவர் திருவாய் மலர்ந்தருளினார்—'புதிய திட்டம் போனால் பரவாயில்லை; காலட்சேபம் நடைபெற்றால் போதும்' என்று!

என்ன பொருள் இதற்கு?

கருத்து வளம் பெற்றவர்கள் அல்லர், காலட்சேபம் கேட்கும் மக்கள் கூட்டத்தினர்! மந்தை மதியினர் தான், கண்ணனின் லீலா விநோதங்களை, கோலாகலங்களைக் கேட்கக் கூடியவர். எனவே, மந்தை மதியினர் பெருகக் காலட்சேபம் நடைபெறுவது போதும் என்கிறார்!

ஆனால், புதிய கல்வித் திட்டத்தினால் ஏற்படும் விளைவு, காலட்சேபம் நடைபெறுவதால் கைவல்யமாகக் கூடும் என ஆச்சாரியார் குறிப்பிடுகிறார். அவர் கூறுவதிலிருந்தே தெரிகிறது—புதிய திட்டம், காலட்சேபம் கேட்கும் தகுதியுடைய மந்தைக் கூட்டமாகவே மக்களை மாற்ற உதவும்—என்பது!

புதிய திட்டம் சிறுவர்களின் கல்விக் கண்களைக் குத்திக் குருடாக்கும் என நாம் கூறியபோது கோபித்த குணாளர்கள், ஆச்சாரியார், அதன் உண்மையை வேறு வார்த்தைகளால் ஒளிவு மறைவு இல்லாமல், காலம் தாழ்த்தி ஒப்புக் கொண்டுள்ளதைக் கண்டு என்ன சொல்லப் போகிறார்களோ, நாம் அறியோம்!

வெட்கமாகவுந்தான் இருக்கிறது—வேதனையாகவுந்தான் இருக்கிறது—குருநாதரின் கோலம் போகப் போக! அனுதாபப்படுகிறோம், ஆணவம் இழந்து, அரசியல் அஞ்ஞாதவாசத்தில் பொருமிக்கொண்டிருக்கும், அன்பர் ஆச்சாரியாரைப் பார்த்து!

மீண்டும் கிளம்பும் அவருடைய உளறல், அனுதாபத்துக்குரியதே யல்லாது, ஆத்திரத்தைத் தரக் கூடியதல்ல! ஆச்சாரியார் இன்று படமெடுத்தாடும் பாம்பல்ல; வெறும் நீர்ப் பாம்பு!

கண்டதும் - கேட்டதும்:

சரவணபவன் சன்னதியில்!

"கந்தா! காருண்யனே! கருணை சுரக்கும் வடிவேலா! ஏறுமயில் ஏறிவிளையாடும் ஆறுமுகனே! குன்றேறி நின்ற குமரனே!"—என்று பக்தர்கள் ஏற்றிப் போற்றும் வடபழனி ஆண்டவன் திருக்கோவில் கொண்டருளியிருக்கும் திருத்தலம்தான் கோடம்பாக்கம்!

அந்த 'ஆஸ்திகக் கோட்டை' பனை—(ஆஸ்திகக் கோட்டை என்று ஆண்டு அறிக்கை வாசித்த தி.மு.கழக அணிச் செயலாளர் குறிப்பிட்டார்) — கோடம்பாக்கத்தில்தான் 'நாஸ்திகர்'கள் என வசைபாடப்படும் நாம், பல்லாயிரவரைச் சந்தித்தோம்! —கோடம்பாக்கம் தி.மு.கழக முதல் ஆண்டு நிறைவு விழாப் பொதுக் கூட்டத்தில் 31-5-54 அன்று!

"பார்த்தீரா ஓய்! இந்தப் பாவிகளை! என்ன நெஞ்சழுத்தம் இந்த நீசர்களுக்கு?"

"என்னய்யா? சாமா! சன்—மார்க்கமெனத் தெரிந்தீர்? விஷயத்தைச் சொல்லுங் காணும்?"

'பின் என்னங்காணும்? இந்தக் கருப்புச் சட்டைக்காரன்கள்—நம்ம ராஜாஜி இன்னும் கொஞ்ச நாள் ஆட்சியிலிருந்திருந்தா—அவராலே இவன்களை அழிக்கத்தானே ஆச்சு அன்னு—இவன்கள் கொஞ்சிலே கொஞ்சமேனும் பயந்தவாளாயும் வாட்டி வைச்சிருப்பார்! 'என்னடா? இன்னிக்கு கிருத்திகையாயிற்றே! இன்று வேண்டாம்! முன்னே பின்னே ஒத்திவைத்துக் கொள்வோம்,' என எண்ணினான்களா? தேடித் தேடி இன்னிக்குன்னு—இந்தக் கிருத்திகை நாளிலே—கூட்டத்தைக் கூட்டி, ஆண்டவனை—இந்த அண்ட பிண்ட சராசரங்களைப் படைத்தவனை—'இல்லை'ன்னு திட்டப் போறான்கள் பாருங்கோ! கருமம்! கருமம்! என்னங் காணும் செய்யறது? எல்லாம் நம்ம விதி?"

என்று, வெண்மை நூல் உதரன் இந்த வார்த்தைகளை உதிர்க்காவிடினும், உள்ளத்திலே இந்த எண்ணம் உதயமாகாமலா இருந்திருக்கும் பலருக்கு?

அந்தப் பலருக்கும், பதில் சொல்லுவரோ, பொதுச் செயலாளர் பாருங்களேன்:—

"முருகா! உனது மனம் உருகாதா? கந்தா! நொந்த உள்ளத்தோடு வந்துள்ளேன்! வேலனே! வேதனை போக்க வகை செய்யப்பா!"—என்று பக்தர் பெருமக்கள், வடபழனி ஆண்டவனிடம் வழக்கமாக முறையிட மாதந்தோறும் செல்லும் கிருத்திகை இன்று! எப்படியோ, கூட்டமும், குமரன் திருநாளும் ஒன்றாக அமைந்து விட்டன! சரவணபவ குகனைச் சந்தித்துச் சங்கடங்கள் போகச் சரியான மார்க்கம் கேட்டுவிட்டு வருபவரின் மனதைப் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல—ஆண்டவனை இல்லையென்று பேசவும் அல்ல—இங்கே நாம் கூடியது,' என்று!

★

வடபழனி ஆண்டவன் கோவிலுக்கு அருகேயே கூட்டம் நடைபெறும் மைதானமும் அமைந்திருந்தது; கோவிலில் சென்று தம குறைகளை குமரப் பெருமானிடம் முறையிட்டுவிட்டு வந்தவர்களை, பொதுச் செயலாளர் கூறியதுபோல

"இங்கே நான் பார்க்கிற திருநீறு அழிந்தும் அழியாமலும் இருக்கும் நெற்றிகள், குங்குமப் பொட்டு கலைந்தும் கலையாமலும் காட்சி தருபவர்கள் — இப்படி, கோயிலில்தான் பூஜை முடிந்துவிட்டதே, அங்கே என்னவோ காலட்சேபம் நடக்கிறது போலும்—என இங்குள்ள மின்விளக்குகளைப் பார்த்துவிட்டு வந்த பக்தர்கள் குறைந்தது ஆயிரம் பேராவது இருப்பார்," என்றதுபோல, பக்தர்கள் பலரும் வந்திருந்தனர்.

வழக்கத்திற்கு மாறாக வழிநெடுக போலீஸ் பந்தோபஸ்து இருந்தது—வந்திருந்தவருக்கெல்லாம் ஆச்சரியமாயிருந்தது!

அன்று அவர்கள் கூட அது பற்றிக் குறிப்பிடும்போது,

(4-ம் பக்கம் பார்க்க)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசன வசதி!

— (:) —

30 கோடி செலவில் திட்டங்கள்!

சென்னைக்கு அல்ல — உத்திர பிரதேசத்திற்கு!

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ 30 கோடி செலவில் பாசன வசதிகளை உருவாக்க உத்திர பிரதேச சர்க்கார் திட்டம் தீட்டியிருக்கிறது. சர்க்கார் நிபுணர்கள் அத்திட்டத்தை ஆராய்ந்து வருகின்றனர்.

திட்டங்களை நிறைவேற்றுவது இந்திய சர்க்கார் கொடுக்கும் பண உதவியின் அளவைப் பொறுத்திருக்கிறது.

புதிய திட்டங்களின் விளைவாக மேலும் முப்பது லட்சம் ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்ய வசதி கிடைக்கும் எனக் கணக்கிடப்படுகிறது.

பஸ்தி, கோரக்பூர், தியோரியா முதலிய மூன்று மாவட்டங்களில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களை வெள்ளக் காடாக்கி வரும், காண்டக் நதியின் நீரைக் கட்டிப் பயன்படுத்துவது உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க திட்டங்களில் எல்லாம் முக்கியமானதாகும்.

மார்வாரிகள் கொடுமை!

முதல் அமைச்சரிடம் புகார்

கோவை, ஜூன் 3— கோவை நகரில் வட்டிக் கடைக்காரர்கள் மாதத்திற்கு 100-க்கு ரூ 10 முதல் 12½ வீதம் வட்டி வசூலிக்கும் கொடுமையைப் போக்க வேண்டுமென்றும், இதனால் ஏழை மக்களுக்கு மிகவும் தொல்லை ஏற்படுவதாகவும், சர்க்கார் விசாரணை செய்து இக்கொடுமையைப் போக்குமாறும், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் துயரைப் போக்க வேண்டுமென்றும் கோரி மகஜர் ஒன்று சென்னை முதல் அமைச்சர் காமராசரிடம் கொடுக்கப்பட்டது.

வடசேரிக்கு என்பது [illegible] தொடரில் உள்ள மலையடிவாரம் [illegible] வாஞ்சி [illegible] என்ற [illegible] தோட்டக்காரர்களின் தலைவர் ஒருவரை பிரிட்டிஷ் [illegible] கொலை செய்துவிட்டது என்று தெரிகிறது.

இந்தியத் தூதுக் குழுவிற்கு இரண்டாம் முறையாகக் கருப்புக்கொடி!

—:o:—

மூன்றாவது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கும் ஏற்பாடு!

நேபாள காங்கிரஸ் தலைவர் இந்திய 'எடுபிடி' என காங்கிரஸ் ஊழியர் வர்ணனை!

காட்மாண்டு களேபரம்!

இந்திய மக்கள் சபையைச் சேர்ந்த 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு 'நல்லெண்ணத் தூதுக் குழு' நேபாளத்திற்கும்—இந்தியாவிற்கும் உள்ள நட்பைப் பெருக்குவதற்கான வழி காண, நேபாளத்திற்குச் சென்றது.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைபோல், நட்புறவைப் பெருக்கச் சென்றவர்களுக்கு, தாங்கள் கொண்டுள்ள பகை உணர்ச்சியை நேபாள மக்கள் பரிசாக வழங்கியுள்ளனர்.

தூதுக் குழுவினருக்கு எதிராக, ஆகாய விமான நிலையத்திலேயே கருப்புக் கொடி காட்டினர் நேபாள மக்கள்! 'வெளியேறு! திரும்பிப்போ?" என இடிமுழக்கம் செய்தனர்!

இரண்டாம் முறையாக, தூதுக் குழுவினர் தங்கி இருந்த மாளிகைக்கு முன்பாக மக்கள், கருப்புக் கொடி காட்டி தங்கள் மனப் புழுக்கத்தைக் காட்டிக் கொண்டனர்!

'அன்னியப் பிடியிலிருந்து நேபாளத்தை உருவாக்க' மூன்றாம் முறையாக எதிர்ப்பு செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

நேபாள தேசியக் காங்கிரஸ் தலைவராக உள்ள எம். பி. கொய்ராலா, 'இந்திய எடுபிடி' என ஏசப்படுகிறார். ஏசுகிறவர்கள் சாதாரண 'அரசியல் அனாமதேயர்கள்' அல்லர்! கொய்ராலா தலைமையில் பணி புரியும், காங்கிரஸ் ஊழியர்களே யாவர்!

அதே ஊழியர்கள், வளர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு, பணச் செலாவணி வீக்கம், அமைதியின்மை ஆகியவைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு, மக்களுக்கு அறைகூவல் விடுத்துமுள்ளனர்.

சரவணபவன் சன்னதியில்! ★

[2-ம்பக்கத் தொடர்ச்சி]

'கிருத்திகை தினத்தன்றே கூட்டம் அமைந்ததினால்தான் போலும்—போலீசார் பாதுகாப்பு பலமாயிருக்கிறது! இந்தத் தொந்தரவை போலீஸ் அதிகாரிகளுக்குத் தந்தமைக்காக வருந்துகிறேன்" என்றார்கள்.

* * *

கூட்டத் துவக்கத்தில் தோழர் என் முகவை—ராஜமாணிக்கம், அ பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

★

'கிருத்துவரைக் கேட்டால் பைபிளைத் தருகிறார்கள்; மகம்மதியரைக் கேட்டால் குரான் தருகிறார்கள்; இந்து மதத்தவராகிய நம்மைப் பார்த்துக் கேட்டால் நாம் எதைத் தருவது?—திருவாசகத்தையா திவ்யப் பிரபந்தத்தையா?—தேவாரத்தையா, தேவ மொழியிலுள்ளதெனப்படும் நான்கு வேதங்களையா?—பெரிய புராணத்தையா?—கம்பராமாயணத்தையா?—எதைத் தருவீர்கள்?

"வேதப் புத்தகங்கள் தான் அப்படி யென்றால் அந்த வேத நூல்கள் சொல்லும் கடவுளர்களாயினும் ஒன்றா; இரண்டா, ஓராயிரமா?

"நீங்களே நினைத்துப் பாருங்கள்—இன்று வட பழனியானை வணங்கிவிட்டு வந்துள்ள நீங்கள், நாளை, நாமாவளி பஜனை செய்து நாராயணனை வணங்காமலா இருப்பீர்கள்? சிறிது யோசித்துப் பாருங்கள்—வடபழனியானும், அந்த நாராயணனும் சந்தித்தால், என்ன பேசிக் கொள்வார்கள்?—'இவன் நேற்று என்னைப் பூஜித்தான்; இன்று உன்னை பூஜிக்கிறான்; இவன் பக்தர்களிலே யாருக்கு மோட்சம் பேர்வழியோ இருக்கிறது' — என்று சொல்ல மாட்டாரா சுப்ரமணியம்?

"நாம் கண்ட கண்ட கோயில்களுக்கெல்லாம் சென்று கும்பிட்டுத் தொழுவது எப்படி நியாயமாகும்?"

இப்படிக் கேட்டார் பக்தகோடிகளை பொதுச் செயலாளர்.

மரகதத் அறையிலே, மதத் துறையிலே நாம் 'ஒருவனே தேவன்' எனும் நிலை நிலைப் பாடுபடுவோம் என்பதை, அவர், பல புராணக் கதைகளின் இழி தன்மையை எடுத்துக் காட்டிய போது—இப்படி ஆபாச புராண இதிகாசங்களும், அவை போதிக்கும் அளவற்ற கடவுளர்களும், அந்தக் கடவுளர்களின் பெயரால் அநியாய, ஆபாசச் சடங்குகளும் நமக்குத் தேவையா? தேவையா?—என்ற கேள்வி வந்திருந்தோர் உள்ளத்தில் எழும்பி, எதிரொலித்தது.

"ருக்மணி என்ற அம்மையார், பார்ப்பன குலத்திலே கும்பகோணத்திலே பிறந்தார்; பருவ வயதிலே மண வாழ்வு தொடங்கினார்; என்ன காலமோ, அம்மையார், மணமான குறுகிய காலத்திலேயே தாலி இழந்தார்; சென்னை குருக்ஷேத்திரத்தில் அங்கத்தினரானார்; அங்குதான் அருண்டேல் என்ற ஆங்கிலேயரைக் கண்டார்; தான் தாலி இழந்தாலும், வாலிபம் இழக்காததால், திருமதி ருக்மணி அருண்டேலானார்; அந்த அம்மையார் பல நடனங்களைப் பயின்று, பிறருக்கும் பயிற்றுவிப்பவர் பாரிஸ் மாநகரில் சென்ற ஆண்டு நடனம் ஆடினார். யார் தலைமையில் தெரியுமா? உதவி ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் தலைமையிலே! பாராட்டிப் பேசியவர் சர். சி. பி. ராமசாமி அய்யர்!!

"எப்படி பார்த்தீர்களா?—பார்ப்பனர் வாழ்வுக்கு சாதி தேவை இல்லை என்றால் விட்டு விடுகின்றனர்; வாழ்வுக்குத் தேவைதான் என்றால் விடாது பிடித்துக் கொள்கின்றனர்; அவர்கள் வாழ்வார்களா, நாம் வாழ்வோமா?"

என்று பொதுச் செயலாளர் குறிப்பிட்டபோது — ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்த அனேகரை—வெட்கித் தலை குனியவைத்தது சிலரை—பலரைச் சிந்திக்கவும் வைத்தது அண்ணாவின் இந்தக் கேள்வி! மொத்தத்தில் அன்றைய கூட்டம் கோடம்பாக்கம் வட்டத்திலே புதிய மறுமலர்ச்சி தருவதாக அமைந்திருந்தது.

'S. P. T.

சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக்கூடம்

SANKARAN PROGRESSIVE TUTORIALS

கருணாநிதி பார்க், தேப்பக்குளம் P. O. திருச்சி.

உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்

ஆரம்பம்: 9—6—54

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்

STAFF:

Mr. N J. தேவதாஸ், M.A.	Mr. G. ரத்தினம், B.SC.
Mrs ஜூடித் லூயிஸ், B.A. (HONS)	,, A. பாலசுப்ரமணியன், B.SC.
Mr. I. திவ்வியநாதன், B.A. (HONS.)	,, D. A. சுமி (விஷாரத்) வித்வான் சோழகர்
,, வெங்கட்ராமன், M.A.L.T.	,, K. ஜான். B.A.
	,, லூயிஸ் பீட்டர், B.A.
,, N.பிச்சை B.A.(HONS.)	,, R. சுப்ரமணியம், B.A.
,, M. வெங்கட்ராமன், M.A.B.COM.	,, C. சாமி, B.A.
	எஞ்சினீயரிங்
,, N.S.கிருஷ்ணசாமி M.A.	Mr. M. பாலகிருஷ்ணன், B.E.
,, V.துரைராஜ், B.SC. B.T.	
,, R. ஜான்சன், B.A.B.T. (Dip. in Geo.)	,, M K. நடராஜன், B.E.
	,, P. சங்கரன், B.E.

வைஸ்-பிரின்சிபால்: Mrs. ஜூடித் லூயிஸ். B.A.(HONS.) (கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்)

பிரின்சிபால்: Mr. N. J. தேவதாஸ், M.A. (திருச்சி நகரில் தனிப் பயிற்சிக்கூடங்களை நிறுவியவர்களில் முதன்மையானவர்)

அலுவலகம்: 16, நந்தி கோவில் தெரு. தேப்பக்குளம் P.O., திருச்சி — I. திவ்வியநாதன், B.A. (HONS.) செயலாளர்.

விபரங்களுக்கு நான்கணா ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்:—

செயலாளர், சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக்கூடம், தேப்பக்குளம் P. O., திருச்சி

கல்வித் திட்ட ஒழிப்பு: நாடெங்கும் வெற்றி விழா

சேவூர்

வி. அரசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற உபதலைவர் கோவிந்தராசு தலைமையில் சிறை சென்றோரைப் பாராட்டி தோழர் எம். கே. சக்ரவர்த்தி பேசினார். தோழர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, தேனீர் விருந்தளிக்கப்பட்டது. மாலையில் தோழர் கே எம் சாரங்கபாணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எ. கைலாசம், கே டி. குப்புசாமி, சொக்கமன் பேசினர். இனிப்பு வழங்கப்பட்டது.

முக்கூடல்

கழக உறுப்பினர் வீடுகள் அலங்கரிக்கப்பட்டன; இனிப்பு வழங்கப்பட்டது. சென்னையில் அறப்போரில் கலந்துகொண்ட தோழர் முத்துகுட்டி அவர்கள் இல்லம் சென்று பல தோழர்கள் அவரைப் பாராட்டினர்.

திருநகரி

26—5—54-ல் விழா கொண்டாடப்பட்டது; மாணவ மாணவிகளுக்கு இனிப்பு பண்டம் வழங்கப்பட்டது.

தாத்தையங்கார் பேட்டை

நையாண்டி மேளத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. இனிப்பு வழங்கப்பட்டது. தோழர் முத்துக்கருப்பன் நன்றி கூறினார்.

மதுரை (மத்திய வட்டாரம்)

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன் தோழர் மு வசனப்பித்தன் கொடியேற்றி வைத்துப் பேசினார்.

* * *

சிங்காரவேலர் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் தோழர் அ. கருப்பையா தலைமையில் கொடியேற்றப்பட்டது. சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

* * *

சமத்துவக் கலை மன்றத்தினரால் தோழர் சுப்பையா தலைமையில் நடைபெற்றது. 1,500 குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

* * *

பூந்தன்றூர் மன்றத்தின் செயற்குழு கூடி பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றியது

* * *

தானமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், 500 சிறார்களுக்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

பா. நா. புதூர்

தோழர் குன்றத் தோழன் தலைமையில் தோழர் புரட்சிதாசன் பேசினார்; இனிப்பு வழங்கப்பட்டது.

கல்லுக்குழி

தோழர் மாணிக்கம் கொடியேற்றி வைத்தார். தோழர் எழிலன் பேசினார். குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

கோவை (நகர கிளை)

தோழர் பழனிச்சாமி தலைமையில் தோழர்கள் நடராஜன், ஏ. நடராஜ், என். ஏ. ராசமாணிக்கம், தண்டபாணி முதலியோர் பேசினர். குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

நாகூர்

செயற்குழு கூடி மகிழ்வு தெரிவித்ததுடன், தேனீர் விருந்தும் சிறார்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

மேலகற்கண்டார்கோட்டை

தோழர் சுந்தரம் தலைமையில் பல தோழர்கள் பேசினர். தோழர் கோபால் கொடியேற்றினார் இனிப்பு இளஞ்சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

சலகண்டபுரம்

தோழர் ம. கண்ணன் தலைமையில் தோழர்கள் கந்தப்பன், கலைச்செல்வன், செல்லப்பன், குருநாதன், கிருட்டினன் ஆகியோர் பேசினர். குழந்தைகட்கு இனிப்பு தரப்பட்டது.

வீரப்பன்சத்திரம் (ஈரோடு)

போராட்ட காரணம் மக்களுக்கு விளக்கப்பட்டதுடன், சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பால்செட்டிசத்திரம்

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன் கூட்டமும் நடைபெற்றது.

திருச்சி

நகர கழகம், கிளைக் கழகங்கள் கொடிகளாலும் மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டன; பெரிய கடை வீதி கிளையில் தோழர்கள் என் செல்வமணி, அருணகிரி, எம். என். மணி, ஜி பராங்குசம், ஏ. நடராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நகரில் உள்ள கிளைக் கழகங்கள் பலவற்றில் இனிப்பு வழங்கப்பட்டது.

ஓசூர்

ஊர்வலம் நடைபெற்றது; சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பொய்சேர் (பம்பாய்)

தோழர் அ. சே. அருணாசலம் தலைமை வகித்தார்; எம். எஸ். சண்முகம் பண்பாடினார்; தோழர்கள் தி. க. ப. முத்தையா, கி ரா. அதிவீரன், கே என். சுப்பையா, வி. என். பொன்னையா ஆகியோர் பேசினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

நெல்லிகுப்பம்

பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சபாபதி, அமீது, தண்டபாணி, தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

கடத்தூர் (அரூர்)

ஊர்வலம் நடைபெற்றது. தோழர் ராசன் கூட்டமொன்றில் பேசினார்.

உலக அரங்கில்

வாஷிங்டன் :
மேற்கு பாகிஸ்தானில் இப்கை வடி வாயுக் குழாய் அமைக்க 140 லட்சம் டாலர் கடன் உதவ சர்வதேச பாங்கியும் 6 தனிப்பட்ட பிரிட்டிஷ் பாங்கிகளும் தீர்மானித்தன.

• • •

இந்தோ—சீனப் போர் நிலைமை மிக அபாயகரமாக இருப்பதாகவும், ஆனால் மோசமாக இருக்கவில்லை என்றும் அமெரிக்க இராஜங்க அமைச்சர் டல்லஸ் கூறினார்.

★

கொழும்பு :
இந்தோ—சீனப் பிரச்சினையில் வி. கே. கிருஷ்ண மேனன் ஜினீவாவில் நடந்துவரும் பேச்சு வார்த்தைகள் குறித்து இலங்கை சர்க்கார், இந்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்துவதாக இலங்கை வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

* * *

இலங்கை அரசாங்கம் ஜப்பான், இந்தோனேஷியா, பர்மா, அமெரிக்கா, சயாம் ஆகிய நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதாகத் தெரிகிறது.

★

ஏதென்ஸ் :
பால்கன் ஒப்பந்தத்தை இராணுவ ஒப்பந்தமாக, தானும் இப்போது கிரீசுக்கு வந்துள்ள மார்ஷல் டிட்டோவும் சேர்ந்து மாற்றப் போவதாக கிரேக்க நாட்டின் பிரதம மந்திரி மார்ஷல் அலெக்சாண்டர் பாபகோஸ் அறிவித்தார்.

★

ஜினீவா :
இந்தோ—சீன நாடுகளில் ஒன்றான கம்போடியா, வியட்மின் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போரிட ஆயுத சப்ளை செய்ய வேண்டுமென்று அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டது.

★

டோக்கியோ :
ஜப்பானிய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிபற்றி ஜப்பான் மந்திரிசபையின் அவசரக் கூட்டமொன்று நடைபெற்றது. தனது உலக சுற்றுப்பிரயாணத்தை பிரதமர் யோஷிடா மீண்டும் ஒத்திப்போடப் போவதாகக் கூறினார்.

★

நியூஸிலாந்து :
'மவுண்ட் நகாருஹோ' என்ற எரிமலையின் மீது விமானமொன்றில் விஞ்ஞானிகள் பறந்து சென்றனர். அந்த எரிமலை சில நாட்களுக்கு முன்பு அதிக அளவில் நெருப்பைக் கக்கியதாம்; அதுபற்றிப் பரிசீலனை செய்யவே விஞ்ஞானிகள் சென்றனர் என்று தெரிகிறது.

★

நியூயார்க் :
வெள்ளையருக்கு இடமில்லை என்று நீக்ரோக்களை மட்டும் அனுமதித்து நடத்தப்படும் டென்னஸி பிஸ்க் கலாசாலையில் இப்போது வெள்ளையர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். நீக்ரோ மிஸ் ஹேரி ஹோவர்ட் என்ற வெள்ளை மாது படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார்.

★

கான்பெர்ரா :
1956-ம் ஆண்டில் நடைபெறப்போகும் ஒலிம்பிக் போட்டிப் பந்தயத்தில் பிரிட்டிஷ் அரசியார் முழுமையான ஆதரவாளராக இருக்க சம்மதித்துள்ளார் என்று தெரிகிறது.

* * *

ஆஸ்திரேலிய வெளிநாட்டிலாகா அமைச்சர் கேஸி, இங்கு நின்று ஜினீவா செல்வாரென்று தெரிகிறது.

வியன்னா :
கீழே இறங்குமாறு கட்டளையிடப்பட்டதை மீறிப் பறந்து சென்றதாகவும், ஆகவே ஹங்கேரிய அதிகாரிகள் பெல்ஜியத்தைச் சேர்ந்த டகோட்டா விமானமொன்றைச் சுட்டதாகவும் தெரிகிறது.

★

கேப்டவுன் :
தென்னாப்பிரிக்க உள்நாட்டமைச்சர் டாக்டர் வெர்வோர்டு, இன உறவைக் கெடுக்க நான் செய்யும் காரியங்களை அவர் உடனே கைவிட வேண்டுமென்று ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசார் கூட்டமொன்றில் கண்டித்தனர்.

★

லண்டன் :
ஜினிவா மாநாடுபற்றிய விவரங்களை அந்தோனி ஈடனிடமிருந்து கேட்க பிரிட்டிஷ் மந்திரி சபையின் கூட்டமொன்று சனிக்கிழமையன்று நடைபெறுகிறது.

★

மாஸ்கோ :
பொறுப்பற்ற முறையில் எழுதினார்கள் என்று குற்றம் சாட்டி 'அக்டோபர்' என்ற சோவியத் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் உதவி ஆசிரியர் இருவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

★

நியூ ஜெர்சி :
இன்னும் பத்தாண்டு காலத்தில் அணுசக்தியினால் இயங்கும் விமானங்கள் மூலமாக அமெரிக்க விமானப் போக்குவரத்தில் உலகில் சிறந்து விளங்கும் என்று அமெரிக்க அணுசக்தி இலாகாவினர் அறிவிக்கின்றனர்.

★

ஜோகன்ஸ்பர்க் :
426½ காரட் எடையுள்ள வெள்ளை — நீல வண்ணமுள்ள வைரம் ஒன்று பிரிட்டோரியாவிலுள்ள 'பிரிமியர்' சுரங்கத்தில் கிடைத்ததாகத் தெரிகிறது. இந்த வைரம் கோஹினூர் வைரத்தைப் போன்று நான்கு மடங்கு பெரியதாகும்.

★

வெவி :
சுவிட்சர்லாந்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நடிகர் சார்லி சாப்ளின், "ஹைட்ரஜன் குண்டுகளை வீச ஒப்புக் கொள்வது மனிதனை நாசம் செய்யும் ஆயுதம் மட்டுமல்ல—உலகின் அழிவுக்கும் கோரச் செய்கையாகும்" — என்று கூறினார்.

★

செயின்ட் லூயிஸ் :
பலாத்காரத்தின் மூலம் அமெரிக்க சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, நான்கு பேருக்கு ஐந்து ஆண்டு தண்டனையும், ஒருவருக்கு மூன்று தண்டனையும் விதிக்கப்பட்டது.

★

சிங்கப்பூர் :
இந்து திருமணங்களை நடத்த அதிகாரிகள் நியமிப்பதை எதிர்த்து சிங்கப்பூர் இந்துக்களின் கூட்டமொன்று நடந்தது. இரு பிரிவினரும் ஒப்புக் கொண்டு இந்து முறைப்படி திருமணப் பதிவு அதிகாரியின் முன் திருமணம் நடைபெறலாம் என்று அவர்கள் கூறினர்.

★

ஹனோய் :
வியட்மின் அணுப்புரங்கள் குவான் பூர் என்னுமிடத்தில் உள்ள ... பிரெஞ்சுக் காரர்களிடமிருந்து கைப்பற்றினார்கள் என்று தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

60-வது வட்ட தி.மு.கழக திறப்பு விழா
விஸ்வலிங்க செட்டி தெரு (மைலாப்பூர் மந்தவெளிக்கருகில்)
6—6—54 மாலை 5½ மணிக்கு
தலைவர்: அலமேலு அப்பாதுரை
திறப்பாளர்: க. அப்பாதுரை
பேசுவோர்:
கண்ணதாசன்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

காட்டுப்பாடி

வ. உ. சி. பூங்கா வெளியில்
6—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம் கிருஷ்ணராஜ்
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
ஏ. எல். சி கிருஷ்ணசாமி

★

சென்னையில் அண்ணாதுரை

7—6—54 மாலை சென்னை, ஆள்வார்பேட்டை மக்கள் முன்னேற்ற மன்றம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை பேசுவார்.

★

சீர்காழி

யாகப்பா டாக்கீஸ் திடலில்
7—6—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. கருணாநிதி
என். எஸ். இளங்கோ
எஸ் எஸ் ராஜேந்திரன்

★

ஆண்டிப்பட்டி

7-6—54 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
ஈ வெ கி. சம்பத்
எஸ் அப்பாவு

★

பு. ஆதிவராகநல்லூர்

தி. மு கழகத் துவக்க விழா
8—6—54 மாலை 4 மணிக்கு
தலைவர்: தில்லை-வில்லாளன்
கொடியேற்றுபவர்:
பொ. சொக்கலிங்கம்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்

★

பூலாமேடு

தி. மு. கழக திறப்பு விழா
8—6—54 இரவு 8 மணிக்கு
தலைவர்: தில்லை-வில்லாளன்
பேசுவோர்
இரா. நெடுஞ்செழியன்

★

குளியம்பாளை

8—6—54 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி சம்பத்
எஸ். அப்பாவு

★

நெய்வேலி

கூட்டுரோடு சமீபம்
8—6—54 மாலை 6 மணிக்கு
தி.மு.கழக துவக்க விழா
தலைவர்: பெ ரத்தினசாமி
பேசுவோர்:
என். வி நடராசன்
ஏ. கோவிந்தசாமி, எம்.எல் ஏ.
சி. முனுசாமி

விருத்தாசலம் வட்ட தி. மு. கழக தோழர்கட்கு

7—6—54 மாலை 2 மணியளவில் விருத்தாசலம் தி மு கழக வட்டத் தோழர் கூட்டம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும்.

செய்திக் கதிர்

பள்ளிகள்
படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 1,270 ஓராசிரியர்—பள்ளிகளைத் திறப்பதென்று சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர். மத்திய சர்க்காரின் உதவி பெற்று இப்பள்ளிகள் நடத்தப்படும் என்று தெரிகிறது. இந்த ஆசிரியர் வேலைக்காக குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுமென்று தெரிகிறது.

★

அருந்ததியர்
கூடுமான வரையில் அருந்ததியர்களின் குறைகளைக் கவனிப்பதாகவும்; தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுவதாகவும் சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜ் கோவை அருந்ததியர் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

★

லஞ்ச ஊழல் கமிட்டி
ஆச்சாரிய கிருபளானியைத் தலைவராகக் கொண்ட ரயில்வே லஞ்ச விசாரணைக் கமிட்டியினர் ஜூன் 10 முதல் 18 வரை தென் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யுமென்று அறிவிக்கப்படுகிறது. சென்னை, திருச்சி, கோவை, பெங்களூர், மேட்டுப்பாளையம் கொச்சி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு இக்கமிட்டி செல்லும்.

★

லெவி
தஞ்சை மாவட்டத்தில் குறுவை மகசூலின்போது 'லெவி' கொள் முதல் செய்வதில்லை என்று சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

★

'ரெட் லேடி'
இம்மாதக் கடைசிக்குள் 50 புது 'ரெட் லேடி' பஸ்கள் சென்னைக்கு வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

விபத்து
கான்பூர் அருகே சக்கேரி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட டகோடா விமானம் ஒன்று ஆறு மைல் பறந்து சென்று விபத்திற்குள்ளாயிற்று; விமான சிப்பந்திகள் ஐவர் சிறு காயத்துடன் தப்பினார்; விமானத்திற்குச் சேதமில்லை.

★

கல்லூரி அனுமதி
வைத்தியக் கல்லூரி மற்றுமுள்ள தொழில் கல்லூரிகளில் இவ்வாண்டிலிருந்து மாணவர்களைச் சேர்ப்பதில் மீண்டும் ராஜ்யத்திலுள்ள ஜில்லாவாரியாகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமென்று தெரிகிறது.

★

பிரெஞ்சிந்தியா
பிரெஞ்சிந்தியாவின் எதிர்காலம் பற்றிப் பாரிசில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துபோயின என்று தெரிகிறது மூன்று வார காலமாகப் பல திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டும் பயன் ஏதும் இல்லை என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

★

புனரமைப்பு
பீகார் அசாம் முதலிய மாகாணங்களிலிருந்து 70 லட்சம் மக்கள் வாழும் 15 ஆயிரம் சதுர மைல் பிரதேசத்தை மேற்கு வங்கத்துடன் இணைக்கவேண்டுமென்று கோரி ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் மேற்கு வங்க சர்க்கார் அறிக்கை ஒன்றைத் தந்திருக்கின்றனர்.

★

அணைக்கட்டு
பரமக்குடி தாலுகாவில் ... கிராமத்தில் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் அணைக்கட்டு ஒன்று கட்டும் திட்டம் அங்கீகாரம் செய்யப்பட்டு வேலையும் துவக்கப்பட்டது.

கனம் காமராஜ் கண்டனக் கணைகள்!

சுற்றத்தாரே குற்றம் சாட்டுகின்றனர்

தலைவர் பதவியை விட்டு விரட்ட முடிவு!

திண்டிவனம், ஜூன் 4—

"ராமசாமி படையாச்சி வன்னிய சங்க மாநாட்டை கூட்டி அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் மந்திரியான செய்கை சரியா, தப்பா என்று வரப்போகும் மாநாடு முடிவு கட்டவேண்டும்."

"கடந்த பத்து வருடங்களாக வன்னிய குல சங்கத்திற்கு தலைவராக இருந்து பணியாற்றிய ராமசாமி படையாச்சியைப் பாராட்டுவதுடன், தற்போது அவர் காங்கிரசுடன் சேர்ந்து மந்திரியானதால் அவரை தலைவர் பதவியிலிருந்து நீக்கி வேறொருவரை மாநாட்டில் தேர்ந்தெடுக்க வேண்டும்."

—இவ்வாறு இரண்டு தீர்மானங்கள் தென் ஆற்காடு மாவட்ட வன்னிய குல சங்க பிரமுகர்களின் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

ஜூன் 13-ம் தேதியன்று திண்டிவனத்தில் நடைபெற இருக்கும் வன்னியர் குல மாநாட்டில் நிறைவேற்றும் தீர்மானங்கள் பற்றி முடிவு செய்யவே இக் கூட்டம் நடைபெற்றது.

பலத்த விவாதத்திற்குப் பின் மேற்கண்ட தீர்மானங்களையும் மாநாட்டில் கொண்டுவருவதென முடிவு செய்யப்பட்டது. கூட்டம் தோழர் கோபால கவுண்டர் இல்லத்தில் நடைபெற்றது. ஆறுக் கணக்கான வன்னிய குல பெருமக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

ஜூன் 6: திருத்துறைப்பூண்டி
7: கூப்பாச்சிக்கோட்டை
8: ஆதனூர்
பூலாமேடு

டிராம் போக்குவரத்து

ஏற்று நடத்த கார்ப்பரேஷன் நிபந்தனைகள்

சென்னை, ஜூன் 3—
சென்னை நகரின் டிராம் சர்வீசை ஏற்று நடத்த சென்னை கார்ப்பரேஷன் 5 நிபந்தனைகள் விதித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள் ... அறிஞர் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது (24, குளக்கரை ... செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.